# பணியிடைக்கால ஊழியர்கள்

BUDGET 2022



## ஸ்கில்ஸ்ஃபியூச்சர் பணி நிலைமாற்றத் திட்டம்

வேலைவாய்ப்பிற்குத் துணைபுரியும் அதிக நிதியுதவியும் தரமும் கொண்ட, தொழில்துறைக்கு உகந்த, பயிற்சி வகுப்புகள்



## எஸ்ஜி ஒற்றுமை இயக்கத்தின் பணியிடைக்கால வாழ்கைத்தொழில் பாதைகள் - நிறுவன இணைப்புத் திட்டம்

அரசாங்கத்தின் இணை நிதியுடன் கூடிய, மாதம் **$3,800** வரையிலான படித்தொகையுடைய 4 – 6 மாதம் வரையிலான முழுநேர இணைப்புத் திட்டம்

# குறைந்த வருமான ஊழியர்கள்

BUDGET 2022

## மேம்படுத்தப்பட்ட வேலைநலன் துணை வருமானத் திட்டம் (ஜனவரி 2023 முதல்)



- **$2,100 முதல் $4,200** வரையிலான உயர்த்தப்பட்ட அதிகபட்ச வருடாந்திர வழங்குதொகைகள்
- தகுதிபெறும் வருமான வரம்பு மாதத்திற்கு 2,500 வெள்ளிக்கு உயர்த்தப்படும்
- 30 முதல் 34 வயது வரையிலான ஊழியர்களுக்கு வேலைநலன் நீட்டிப்பு

## குறைந்த சம்பள ஊழியர்களை ஊக்கப்படுத்துதல்



- படிப்படியான சம்பள உயர்வு முறை மேலும் பல துறைகளுக்கும் தொழில்களுக்கும் விரிவாக்கம்
- வெளிநாட்டவரை வேலைக்கு அமர்த்தும் நிறுவனங்கள் உள்ளூர் ஊழியர்களுக்குக் குறைந்தபட்ச உள்ளூர்த் தகுதிபெறும் சம்பளத்தை அளிக்கவேண்டும் (தற்போது $1,400)
- மார்ச் 2023 முதல், அரசாங்க விநியோகர்கள் படிப்படியான சம்பள உயர்வுக்கான முத்திரையைப் பெறவேண்டும்

## படிப்படியான சம்பள உதவித்தொகை திட்டம்



- 2022 முதல் 2026 வரை, குறைந்த சம்பளம் ஈட்டும் ஊழியர்களின் சம்பள உயர்வுக்கு அரசாங்கம் இணைநிதி வழங்கும்

# மூத்த ஊழியர்கள்

BUDGET 2022

## கூடுதலான மத்திய சேமநிதிப் பங்களிப்பு விகிதங்கள்



- மொத்தப் பங்களிப்பு விகிதத்தில் 1.5 முதல் 2 விழுக்காட்டுப் புள்ளிகள் வரையிலான கூடுதல் அதிகரிப்பு (முதலாளிகளும் ஊழியர்களும்)
- 2023-இல் முதலாளிகளின் பங்களிப்புகளில் பாதியளவை ஈடுகட்ட மத்திய சேமநிதிச் சந்தா தொகை அதிகரிப்பிற்கான கழிவு

## பணி ஓய்வுக்காலத்திற்கான அடிப்படைத் தொகையில் மாற்றங்கள்



- 2023 முதல் 2027 வரை, 55 வயதை அடையும் மத்திய சேமநிதி உறுப்பினர் ஒவ்வொருவருக்கும், ஒவ்வோர் ஆண்டும் 3.5 விழுக்காட்டு உயர்வு
- 2027இல் 55 வயதை அடையும் தற்போதைய மத்திய சேமநிதி உறுப்பினர்களில், 10-இல் சுமார் 8 பேர் அடிப்படைத் தொகை அல்லது அதற்கும் அதிகமாக வைத்திருப்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது
- அடிப்படைத் தொகையை எட்ட மத்திய சேமநிதிக் கணக்கில் கூடுதல் தொகை நிரப்பத் தேவையில்லை